

ISSN: 2582-5518

# புதுகை வரலாறு நாளிதழ்

Follow Us: PUDUGAI VARALARU




திங்கள் ❖ செப்டம்பர். 04, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 8 பக்கம் ❖ மலர் 10 ❖ இதழ் 336 ❖ ரூ.3

# சென்னை அம்ருதா விஸ்வ வித்யாபீடம் பி.டெக் படித்த 475 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, செப் 4-

சென்னைக்கு அருகே திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் பகுதியில் அம்ருதா விஸ்வ வித்யாபீடம் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரின் 3-வது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், பி.டெக் படிப்பில் 202125-ம் கல்வியாண்டில் படித்து முடித்த 475 மாணவர்களுக்கு பட்டம் வழங்கும்நிகழ்ச்சி அம்ருதா கல்லூரி பட்டமளிப்பு மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,மாதா அம்ருதானந்தமயி மடத்தின் பொருளாளர் சம்பூஜ்ய ஸ்வாமி இராமகிருஷ்ணானந்தபுரி தலைமை தாங்கினார். அம்ருதா விஸ்வ வித்யா பீடம் பதிவாளர் டாக்டர் பி.அஜித்குமார் முன்னிலை வகித்தார்.

பொறியியல் கல்லூரியின் டீன் டாக்டர் சசங்கன் ராமநாதன் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில், காணொலிமூலம் அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் வேந்தர் அம்மா,சத்குரு ஸ்ரீ மாதா அம்ருதானந்தமயி தேவி அம்மாவின் அருளுரை இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில், ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் இயக்குநர் ஸ்ரீ பத்மகுமார் இ.எஸ். தலைமை விருந்தினராகவும், எஸ்கேஎப் இந்தியாவின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஸ்ரீ சனோஜ் சோமசுந்தரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தபுரி, தைத்திரிய உபநிஷத்திலிருந்து வேத வழிமுறைகளைக்குறித்தும் பாரம்பரிய பட்டமளிப்பு உறுதிமொழியை வழி நடத்தினார்.

இதனைத்தொடர்ந்து 475 மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும், முதலிடம் பிடித்தவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் தரவரிசைச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், வேந்தர் பதக்கம் வென்ற பப்பிசெட்டி ஹர்ஷினி கல்லூரியின் சிறப்புகளையும் தனது அனுபவத்தையும் விளக்கி கூறினார். நிகழ்ச்சியின் முடிவில், அம்ருதா ஸ்கூல் ஆஃப் இன்ஜினியரிங் கம்ப்யூட்டிங் முதல்வர் டாக்டர் வி.விஜயகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மீடியா செய்தி

MEDIA SEITHI தமிழ் நாளிதழ்

RNI NO : TN TAM/2016/73491 mediaseithi@gmail.com

மலர் – 9 இதழ் – 326 சென்னை 03.09.2025 புதன்கிழமை ஆண்டு சந்தா 1800/- பக்கம் – 4 விலை ரூ. 5.00


# சென்னை அம்ருதா விஸ்வ வித்யாபீடம் பி.டெக் படித்த 475 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா




பெரியபாளையம்,செப்3

சென்னை அம்ருதா விஸ்வ வித்யாபீடம்பி.டெக்படித்த475 மாணவர்களுக்குபட்டமளிப்பு விழா நடைபெற்றது.

சென்னைக்கு அருகே திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம்ஒன்றியம்,வெங்கல் பகுதியில் அம்ருதா விஸ்வ வித்யாபீடம்கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரின் 3வது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில்,பி.டெக் படிப்பில் 2021டு`25ம்கல்வியாண்டில் படித்து முடித்த 475 மாணவர்களுக்குபட்டம்வழங்கும் நிகழ்ச்சி அம்ருதாகல்லூரி பட்டமளிப்பு மண்டப வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,மாதா அம்ருதானந்தமயி மடத்தின் பொருளாளர் சம்பூஜ்ய ஸ்வாமி இராமகிருஷ்ணானந்தபுரி தலைமை தாங்கினார். அம்ருதா விஸ்வ வித்யா பீடம்

பதிவாளர் டாக்டர் பி.அஜித்குமார் முன்னிலை வகித்தார்.

பொறியியல் கல்லூரியின் டீன் டாக்டர் சசங்கன் ராமநாதன் அனைவரையும் வரவேற்றார்.இந்நிகழ்ச்சியில், காணொலி மூலம் அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் வேந்தர் அம்மா,சத்குரு ஸ்ரீ மாதா அம்ருதானந்தமயி தேவி அம்மாவின் அருளுரை இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ ஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் புகழ் பெற்றவிஞ்ஞானி மற்றும் இயக்குநர் ஸ்ரீ பத்மகுமார் இ.எஸ். தலைமை விருந்தினராகவும், எஸ்கேஎப் இந்தியாவின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஸ்ரீ சனோஜ் சோமசுந்தரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தபுரி, தைத்திரிய உபநிஷத்திலிருந்து வேத வழிமுறைகளைக் குறித்தும் பாரம்பரிய பட்டமளிப்பு உறுதிமொழியை வழி நடத்தினார். இதனைத் தொடர்ந்து475மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும்,தங்கம்பிடித்தவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் தரவரிசைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், வேந்தர் பதக்கம் வென்றபப்பிசெட்டி ஹர்ஷினி கல்லூரியின் சிறப்புகளையும் தனது அனுபவத்தையும் விளக்கி கூறினார். நிகழ்ச்சியின் முடிவில்,அம்ருதா ஸ்கூல் ஆஃப் இன்ஜினியரிங் கம்ப்யூட்டிங் முதல்வர் டாக்டர் வி.விஜயகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.